# பூச்சி கட்டுப்பாடு பற்றிய ஜுன் (2019) மாதத்திற்கான முன்னறிவிப்பு

## நெல்

தண்டு துளைப்பானின் தாக்குதல் தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் காணப்படுகிறது. தண்டு துளைப்பானின் தாக்குதலை கட்டுப்படுத்த கார்டாப் 400 கிராம் 1 ஏக்கருக்கு அல்லது குளோரான்ட்ரினிலிபுரோல் ஏக்கருக்கு 60 மில்லி தெளிக்கலாம். தண்டு துளைப்பானின் வளர்ந்த அந்துப்பூச்சிகளின் நடமாற்றத்தை இனக் கவர்ச்சி பொரி ஏக்கருக்கு 5 வைத்து கண்காணித்து கட்டுப்படுத்தலாம். தற்போது நிலவும் அதிகரித்துள்ள வெப்பநிலையில் இலை செம்பேனின் தாக்குதல் கோடை நெற்பயிரில் காணப்படுகிறது. இதனை கட்டுப்படுத்த டைக்கோபால் 500 மில்லி (அ) ப்ராப்பார்கைட் ஏக்கருக்கு 625 மில்லி அல்லது பென்பைராக்ஸிமெட் 250 மில்லி என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம்.

கோடை பருவ நெல் காவிரி பாசனப் பகுதி மற்றும் கரூர், ஈரோடு மாவட்டத்தின் சில பகுதிகளில் பயிரிடப்பட்டு, நெற்பயிர் பூக்கும் பருவத்தில் உள்ளது. தற்போது நிலவும் தட்பவெப்ப நிலை, இலைப்புள்ளி நோய் மற்றும் துங்ரோ நோய் தாக்க ஏதுவாக உள்ளது. இந்த இரு நோய்களையும் கட்டுப்படுத்த நெல் வயல் மற்றும் வரப்புகளில் உள்ள களைகளை அகற்ற வேண்டும். மேலும் இலைப்புள்ளி நோயை கட்டுப்படுத்த மாங்கோசெப் 2கிராம் ஒரு லிட்டர் நீருக்கு (அல்லது) மெட்டொமினோஸ்டோபின் 500 மிலி ஒரு எக்டருக்கு என்ற அளவில் காலை அல்லது மாலை வேளைகளில் தெளிக்க வேண்டும் தேவைப்பட்டால் 2 அல்லது 3 முறை இதே பூசணக்கொல்லியை மீண்டும் 10-15 நாள் இடைவெளியில் தெளிக்க வேண்டும்.

நெல் துங்ரோ நச்சுயிரி நோய் தாக்கிய பயிர் குட்டையாகவும் தூர்கள் குறைந்தும் காணப்படும். மேலும் இலைகள் ஆரஞ்சு-மஞ்சள் நிறமாகவும், பழுப்பு புள்ளிகளுடனும் காணப்படும். இந்நோயைப் பரப்பும் பச்சை தத்துப்பூச்சியை கட்டுப்படுத்த வயல்களில் விளக்குப் பொறி வைத்து கவர்ந்து அழிக்கலாம். இப்பூச்சிகளின் நடமாட்டம் பொருளதார சேத நிலையை கடந்து காணப்பட்டால் தயாமித்தாக்சாம் 25 குருணை100 கிராம் (அல்லது) இம்மிடாகுளோபிரிட் 17.8 எஸ்.எல் 100 மிலி இவற்றில் ஏதேனும் ஒரு பூச்சிக்கொல்லியை ஒரு எக்டருக்கு தெளித்து இந்நோயை கட்டுப்படுத்தலாம்.

## பருத்தி

அறுவடை செய்த பின் மீதம் உள்ள எஞ்சிய பருத்தி பயிறினை முழுவதுமாக அகற்றியோ அல்லது மடக்கி உழவு செய்ய வேண்டும். இதனால் நிலத்தில் தங்கி இருக்கும் பூச்சிகளின் உற்பத்தியை குறைக்கலாம். சாறு உறுஞ்சும் பூச்சிகளான அசுவினி, இலை தத்துப்பூச்சி மற்றம் வெள்ளை ஈ ஆகியவற்றை 3 சத வேப்ப எண்ணெய்யை தெளித்து கட்டுப்படுத்தலாம். தண்டுகூன்வண்டு மற்றும் வேரழுகல் நோய் தாக்குதல் பருத்தி பயிரிடப்படும் பகுதிகளில் காணப்படுகிறது. தண்டுகூன்வண்டு மற்றும் வேரழுகல் நோயைக்

கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2.5 மில்லி குளோர்பைரிஃபாஸ் மருந்துடன் ஒரு கிராம் கார்பன்டசிம் மருந்தை கலந்து வேர் பகுதி நனையும்படி ஊற்ற வேண்டும். 15 நாட்கள் கழித்து மருந்து கலவையை மீண்டும் ஒரு முறை ஊற்ற வேண்டும் என்று விவசாயிகளுக்கு பரிந்துரைக்கப்படுகிறது.

**தக்காளி**

தக்காளியில் காய்புழு மற்றும் ஊசித்துளைப்பான் தாக்குதல் தென்படுகிறது. இதனை கட்டுப்படுத்த இனக்கவர்ச்சி பொறி ஏக்கருக்கு 5 என்ற எண்ணிக்கையில் வைத்தல் மற்றும் டிரைக்கோகிரம்மா ஒட்டுண்ணிகளை ஏக்கருக்கு 20,000 என்ற எண்ணிக்கையில் பூக்கும் தருணம் முதல் தோட்டங்களில் வெளியிடுதல் 1 லிட்டர் நீருக்கு அசாடிராக்டின் 2 மில்லி அல்லது இன்டாக்ஸாகார்ப் 0.5 மில்லி லிட்டர் அல்லது புளுபென்டிஅமைடு 0.5 கிராம் தெளித்து கட்டுப்படுத்தலாம். தக்காளியில் இலைக்கருகல் நோய்த் தாக்குதல் தென்படுகிறது. ஆதலால் விவசாயிகள் மான்கோசெப் என்ற மருந்தை, ஒரு லிட்டர் நீருக்கு 2 கிராம் என்ற விகிதத்தில் கலந்து வாரமிருமுறை தெளிக்கவும்.

**வெண்டை**

வெண்டையில் நரம்புத் தேமல் நோய்யைகட்டுப்படுத்த மீதைல் டெமட்டான் 25 EC 500 மிலி/எக்டர் அல்லது டைமீதோயேட் 30 EC 500மிலி/எக்டர் என்ற அளவில் 15 நாள் இடைவெளியில் உபயோகிக்கலாம்.

**வெங்காயம்**

வெங்காயத்தில் இலைசருமத்தில் கொப்புளங்கள் மழைகாலத்தில் ஏற்படும். இதனைகட்டுப்படுத்த ஒரு லிட்டர் நீரில் மேன்கோசெப் 2 கிஅல்லது காப்பர் ஆக்ஸி குளோரைடு 2.5 கிராம் என்ற விகிதத்தில் தெளிக்கவும்.

**வேர்முடிச்சு மற்றும் மொச்சை வடிவ நூற்புழுக்கள்**

தக்காளி, கத்தரி, வெண்டை, பீன்ஸ் மற்றும் மொச்சை வகை காய்கறிப் பயிர்களில் வேர்முடிச்சு மற்றும் மொச்சை வடிவ நூற்புழுக்கள் தொடந்து தாக்குவதற்கான வாய்ப்புகள் உள்ளது. நூற்புழுக்கள் தாக்கப்பட்ட பயிர்கள் மஞ்சளாகவும், பகல் நேரங்களில் வாடிக் காணப்படும் மேலும் வேர்களில் "முடிச்சுகள்" காணப்படும். இதனை கட்டுப்படுத்த வேப்பம் பிண்ணாக்கு எக்டருக்கு 400 கிலோ இடுதல் மற்றும் கேந்தி பயிரை 3:1 என்ற விகிதத்தில் ஊடுபயிர் செய்தல். ஒரு எக்டருக்கு 2.5 கிலோ *பர்பூரியோசிலியம் லிலாசினம்* உயிரினக் கலவையை 100 கிலோ தொழு உரத்துடன் கலந்து நட்ட15 வது நாளில் இடவேண்டும்.

**காலிஃபிளவர் மற்றும் முட்டைகோஸ்**

முட்டைகோஸ் மற்றும் காலிஃபிளவர் பயிர்களில் வைர முதுகு பூச்சியின் தாக்குதல் உள்ளது. இதனை கட்டுப்படுத்த இன கவர்ச்சி பொறி ஏக்கருக்கு 5 வைக்க வேண்டும். வேப்பங்கொட்டை சாறு 5 சதம் அல்லது ஏக்கருக்கு குளோரான்ட்ரினிலிபுரோல் 30 மி.லி. தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**மா**

மாவில் தற்சமயம் பழ ஈக்களின் தாக்குதல் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் தென்படுகிறது. இதனை கட்டுப்படுத்த பழ ஈக்கள் தாக்கிய மா பழங்களை கைகளால் சேகரித்து அழிக்க வேண்டும். மீத்தைல் யூஜினால் கவர்ச்சி பொறியினை ஏக்கருக்கு 10 என்ற எண்ணிக்கையில் வைத்து ஆண் பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம்.

**வாழை**

வாழையில் இலைப்புள்ளி நோய் தாக்குதல் கோயமுத்தூர், ஈரோடு மற்றும் திருச்சி மாவட்டங்களில் மலைக்காலங்களில் தென்படும் இதனை கட்டுப்படுத்த கார்பன்டாசிம் @ 0.1 சதம் அல்லது மான்கோசெப் @ 0.25 சதம் அல்லது புரோபிகோனசோல் 0.1 சதம் ஒட்டு திரவமான டீப்பால் சேர்த்து 10-15 நாட்கள் இடைவெளியில் அறிகுறிகள் ஆரம்பித்ததிலிருந்து இலையின் அடிப்பகுதியில் தெளிக்கவும். பியூசேரியம் வாடல் நோயை கட்டுப்படுத்த கிழங்குகளை கார்பன்டாசிம் 1 கி/லிட்டர் கரைசலில் 30 நிமிடம் நனைத்து நடவு செய்யவும். மரத்தின் 3, 5 மற்றும் 7 ஆம் மாதத்தில் கார்பன்டாசிம் 2 விழுக்காடு (20 கி/லி) கரைசல் தயாரித்து 3 மி.லி யை கிழங்கினுள் செலுத்தவும். நோய் தாக்கப்பட்ட மரம் மற்றும் அதனை சுற்றியுள்ள மற்ற வாழை மரங்களுக்கும் கார்பன்டாசிம் (1 கி/லிட்டர்) தயாரித்து மரத்தை சுற்றி 2, 4 மற்றும் 6 ஆம் மாதத்தில் ஊற்ற வேண்டும்.

**தோட்டக்கலை பயிர்களில் வெள்ளை ஈக்கள், இலைப்பேன் மற்றும் தத்துப்பூச்சி மேலாண்மை**

தற்பொழுது நிலவி வரும் வானிலை சூழலில் மாவுப்பூச்சி, இலைபேன், வெள்ள ஈக்கள் மற்றும் சுருள் வெள்ளை ஈக்களின் தாக்குதல் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே விவசாயிகள் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் நடமாட்டத்தை கண்காணிக்க ஏக்கருக்கு 5 மஞ்சள் வண்ண ஒட்டும் பொறிகள் வைத்தும் தாக்குதல் அதிகம் காணப்படின் 1 லிட்டர் நீரில் 50 கிராம் வேப்பங் கொட்டை கரைசல் தெளிக்க வேண்டும்.

**மக்காச் சோளத்தில் படைப்புழு தாக்குதல்**

மக்காச் சோளத்தில் படைப்புழுவின் சேதம் அனைத்து மாவட்டத்தில் காணப்பட்டது. அனைத்து பகுதிகளிலும் மக்காச் சோள பயிர் அறுவடை செய்யப்பட்டுள்ளது. இந்த பகுதிகளில் இப் புழுக்களின் நடமாட்டம் மற்றும் சேதம் வேறு பயிர்களில் உள்ளதா என்பதை கண்காணிக்க வேண்டும்.

**ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு முறைகள்**

- தொடர்ந்து மக்காச்சோளம் பயிரிடுவதை தவிர்க்க வேண்டும். பயிர் சுழற்சி முறையை பின்பற்ற வேண்டும்.
- வயலை ஆழமாக உழுது மண்ணில் உள்ள கூண்டு புழுக்களை வெளியேற்றி அழிக்கலாம்.
- வேப்பம் பிண்ணாக்கு ஏக்கருக்கு 100கிலோ அளவில் இடுவதால் மண்ணில் உள்ள கூண்டுபுழுவை அழிக்கலாம்.
- சரியான இடைவெளியில் மக்காச்சோளம் பயிரிடவேண்டும். மானாவாரியில் 45x20 செமீ மற்றும் பாசன பகுதிகளில் 60x25 செமீ இடைவெளி இருக்குமாறு பயிரிடுவதன் மூலம் புழுக்களின் நடமாட்டத்தை குறைக்கலாம்.
- பெவெரியா 10 கிராம் அல்லது இமிடாகுளோபிரிட் 10 கிராம் அல்லது தையோமீத்தாக்ஸம் 10 கிராம் ஒரு கிலோ விதையுடன் கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும்.
- விளக்குப்பொறி ஒன்றை ஒரு ஹெக்டேர் பரப்பில் வைத்து அந்துப்பூச்சிகளை கண்காணிக்க வேண்டும். விளக்குப் பொறியின் கீழ் ஒரு கலனில் தண்ணீருடன் மண்ணெண்னை கலந்து வைப்பதன் முலம் அந்து பூச்சுகள் அதில் விழுந்து இறந்து விடும்.
- வரப்பு பயிராக சோளம், தட்டை பயறு, சூரியகாந்தி, சாமந்தி, மரவள்ளி ஆகியவற்றை பயிரிட்டு இந்த பூச்சிகளின் எண்ணிக்கையை குறைக்கலாம்.
- முட்டைக்குவியல்கள் மற்றும் புழுக்களை சேகரித்து அழிக்க வேண்டும்.
- மெட்டாரைசியம் பூஞ்சாண கலவையை ஒரு ஏக்கருக்கு 400 கிராம் அல்லது 400 மில்லி தெளித்து கட்டுப்படுத்தலாம்.
- கீழே கொடுக்கப்பட்டுள்ள மருந்துகளில் ஏதேனும் ஒன்றை கைத்தெளிப்பான் முலம் தெளித்து மக்காசோள படைப்புழுவை கட்டுப்டுத்தலாம் (ஒரு லிட்டர் நீருக்கு).
  அசாடிராக்டின் 1 இசி - 2 மில்லி (அ) தயோடிகார்ப் 75 டபிள்யு பி – 2 கிராம் (அ) எமாமக்டின் பென்சோயேட் 5 எஸ்ஜி – 0.4 கிராம் (அ) ஸ்பைநோசட் 45 எஸ்சி 3 மிலி – 0.5 மில்லி தெளிக்க வேண்டும்
- பூச்சி கொல்லி மருந்து தெளிக்கும் போது தொடர்ந்து ஒரே வகையான மருந்தை தெளிக்க கூடாது.
- பூச்சி மருந்து தெளிக்கும் போது மருந்து மக்காச்சோள பயிரின் குருத்துப்பகுதியில் படுமாறு தெளிக்க வேண்டும்,

**தென்னையை தாக்கும் பூச்சிகள்**

**சுருள் வெள்ளை ஈ - ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு முறைகள்**

தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ள அனைத்து இடங்களிலும் சுருள் வெள்ளை ஈ தாக்குதல் தற்போதும் தென்படுகிறது. இந்த வெள்ளை ஈக்கள் சாறை உறிஞ்சுவதன் முலம் இலைகள் பழுப்பு அடைந்து விடும். மேலும் இந்த பூச்சிகளின் உடலிலிருந்து தேன் போன்ற திரவம் சுரந்து இலையின் மேல் படுவதால் கரும் பூஞ்சாணம் தோன்றுகிறது. இதனால் இலைப் பரப்பின்

மேல் கருப்பு நிற பூஞ்சாணம் படர்ந்து ஒளிச்சேர்க்கை பாதிக்கிறது. இதனால் மரங்களின் வளர்ச்சி குறைந்து காணப்படும்.

- என்கார்சியா ஒட்டுண்ணியினை ஏக்கருக்கு 100 மற்றும் கிரைசோபா ஜாஸ்ட்ரோவி பொறி வண்டுகளை ஏக்கருக்கு 500 என்ற எண்ணிக்கையில் வெளியிட்டு கட்டுப்படுத்தலாம்.
- மேலும் இயற்கை எதிரிகளான கிரைசோபெர்லா பொறிவண்டுகள் மற்றும் என்கார்சியா ஒட்டுண்ணிகளை பாதுகாப்பதன் மூலம் வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்தலாம். என்கார்சியா ஒட்டுண்ணியை ஆழியார் நகர் தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம். மேலும் இந்தப் பூச்சியை உண்ணும் பொறி வண்டுகளை கோவை, பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண் பல்கலைகழகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
- மஞ்சள் நிற பாலித்தீன் தாள்களால் உருவாக்கப்படும் ஒட்டும் பொறிகள் (5 அடி நீளம், 1.5 அடி அகலம்) ஏக்கருக்கு, 8 என்ற எண்ணிக்கையில், 6 அடி உயரத்தில் ஆங்காங்கே தென்னை மரங்களுக்கிடையே கட்டி வெள்ளை ஈக்களை கவர்ந்து அழிக்கலாம்.
- முக்கியமாக ரசாயன பூச்சிக்கொல்லிகள் பயன்படுத்துவதை முற்றிலும் தவிர்த்து பூச்சிக்கொல்லி அற்ற இயற்கை சூழலை உருவாக்குதல் வேண்டும்.

**தகவல்**

1. இயக்குநர், பயிர் பாதுகாப்பு மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை – 3, தொலைபேசி – **0422 6611237.**

2. பேராசிரியர் மற்றும் தலைவர், பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை –3, தொலைபேசி – **0422 6611214.**

3. பேராசிரியர் மற்றும் தலைவர், நோயியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை –3, தொலைபேசி – **0422 6611226**

4. பேராசிரியர் மற்றும் தலைவர், நூற்புழுவியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை –3, தொலைபேசி – **0422 6611264.**